# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),**

ஒ.மு. எண்: 1331/ஊராட்சி/2018

நாள்: 28/9/2018

கே. மணி,
5/91, காந்திநகர்,
பள்ளிப்பாளையம் ரோடு,
கொமாரபாளையம் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம் – 638 183. – **மனுதாரர்**

1. ஊராட்சி செயலர்,
   மேட்டு நாதவம் பாளையம் ஊராட்சி.
2. வட்டார வளர்ச்சி அலுவலர், ஈரோடு.
3. இணை இயக்குநர் ஊராட்சிகள், ஈரோடு. – **எதிர் மனுதாரர்கள்**

## ஆணை

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம், பள்ளிபாளையம் ரோடு, காந்தி நகர், கதவு எண்.5/91ல் வசிக்கும் திரு. கே. மணி என்பவர், அவருடைய 24.9.2018 நாளிட்ட மனுவில் ஈரோடு மாவட்டம், மேட்டு நாதவம் பாளையம் கிராமம், காளிங்கராயன் பாளையம் பழையூரில் இயங்கி வரும் 'மதர்ஸ் மெட்ரிகுலேசன்' பள்ளிக்கு அங்கீகாரம் பெற போலியான சான்றிதழ்கள் தயார் செய்து அனுமதி பெற உதவியாக செயல்பட்ட மேட்டுநாதவம்பாளையம் ஊராட்சி செயலாளர், ஈரோடு வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சிகளின் இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம். ஈரோடு ஆகியோர்கள் மீது விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்றத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை 'இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ், பனகல் மாளிகை, சென்னை -600 015 அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ், சென்னை அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2018-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

கே. மணி,
5/91, காந்திநகர்,
பள்ளிப்பாளையம் ரோடு,
கொமாரபாளையம் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம் – 638 183.

நகல்

1. இயக்குநர்,
   ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ்,
   பனகல் மாளிகை, சென்னை -600 015. (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. ஊராட்சிகளின் உதவி பிரிவு அலுவலர்.